



**FRIDAY**

**SERMON**

26 APRIL 2019

(19 SHABAAN 1440 AH)

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**
**MUNIR AHMAD AZIM**

# EARTH ALERT: SAVE OUR PLANET!

# பூமி எச்சரிக்கையில்: நம்முடைய கிரகத்தை பாதுகாப்போம்

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

**ச**லாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுதும், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

இந்த வார ஆரம்ப நாள் அதாவது 22 ஏப்ரல் 2019 தேதியன்று சர்வதேசிய அளவில் பூமி தினமாக (Mother Earth Day) கொண்டாடப்பட்டது. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் வழங்கப்பட்ட பூமி மற்றும் அதிலுள்ள அனைத்து பொருள் வகைகளை அத்தினம் நினைவூட்டுகிறது. அத்தோடு நம் பூமி அபாயத்தில் உள்ளது என்ற ஞாபகத்தையும் அத்தினம் நினைவூட்டி எச்சரிக்கிறது. ஆகவே மனிதர்கள் என்ற நிலையில் பூமியை பாதுகாப்பதற்கான கடமை நாம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. உண்மையில் இயற்கையானது,

ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சி, வளம், மற்றும் அமைதியான வாழ்கையை அமைக்க உதவும் வகையில் அமைந்துள்ளது. இயற்க்கை என்பது மனித குலத்திற்கு இறைவன் வழங்கப்பட்ட பரிசாகும். இவ்வாறாயினும் எல்லா வகையிலும் செல்வத்தை குவிப்பதற்கு மக்கள் மற்றும் நாடுகளின் பேராசை, மிதமிஞ்சிய நுகர்வுடன் இணைந்து அனைத்து வகைப்பட்ட இலவச இயற்கை வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்துவதை தடுத்துக் கொள்கிறது. அது இன்றைய சூழ்நிலையில் மனிதகுலத்தை நிலை நிறுத்தியுள்ளது.

எதிர்காலத்தைப் பற்றி இந்த அளவு பதற்றமாக இருக்கும் ஒரு நிலையினை இதற்குமுன்னர் மனிதகுலம் சந்தித்ததில்லை. வெள்ளபெருக்கம், வறட்சி, சுனாமி, பூகம்பம், சூறாவளி, தீ மற்றும் புகை விபத்துகள் போன்ற பல்வகையான பேரழிவுகளை அவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

பாரீஸ் நாட்டில் 15 ஏப்ரல் 2019 திங்கள்கிழமையன்று பிரான்ஸின் மற்றும் உலகத்தின் மிக பெரிய கிர்ஸ்தவ தேவாலயங்களில் (Cathedrals) ஒன்றாகிய நோட்ரி டாமே டி பாரீஸ் (Notre Dame de Paris) தீயில் எரிந்தது. பிரான்ஸும் பொதுவாக கிறிஸ்தவ உலகமும் தங்களின் மிகப்பெரிய சின்னங்களில் ஒன்று அழிவதை கண்டனர்.

மேலும் உலகின் ஒவ்வொரு மூலையிலும் கடுமையான வெப்பமும் குளிரும் நிகழ்ந்து வருகிறது. மேலும் வழக்கத்திற்கு மாறான பருவங்களிலும், எதிர்பராத இடங்களிலும் கூட இது நிகழ்ந்து வருகிறது என்பது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்துகிறது. இத்தகைய பரிமாணத்தின் பேரழிவு இதற்கமுன் நிகழ்ந்ததில்லை. மனிதனின் கரங்களால் கொண்டுவரப்பட்ட இத்தகைய பருவநிலை மாற்றங்கள் காரணமாக நமது பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் படலம் (Ozone Layer) அழிந்துவிட்டது. அதன் விளைவாக புவிவெப்பமடைதல் மற்றும் அதன் பின்னணியில் பல்வேறு பேரழிவுகள் ஏற்பட்டுவருகின்றன என்று பல நிபுணர்களும் கூறுகின்றனர். மனித கரங்களால் அழைத்து வரப்படும் இத்தகைய இயற்கைபேரழிவுகள் உண்மையில் தெய்வீக நினைவூட்டல்களாகும். இது மக்கள் தங்கள் தீய வழிகளை கைவிட்டு, நேர்மையான வாழ்கை முறைகளை அமைக்க வழங்கப்படும் முன்னெச்சரிக்கைகளாகும்.

எல்லாம் வல்ல இறைவன் திருக்குர்- ஆனில் கூறுகின்றான்.

**“மக்களின் கைகள் செய்த செயல்களினால், நிலத்திலும் கடலிலும் குழப்பம் பரவியுள்ளது. இதனால் அவர்கள் (தங்கள் தீய செயல்களிலிருந்து) திரும்புவதற்காக இறைவன் அவர்களை அவர்களின் செயல்களுள் சிலவற்றை அதாவது அதன் விளைவை இவ்வுலகில் சுவைக்க வைப்பான்”. (30:42)**

வளிமண்டலத்தில் கார்பன் மற்றும் பிற நச்சுகளை மிகுதியாக கடத்தி விடுவதன் மூலம் வளிமண்டலம் மிக பெரிய அழிவுக்குள்ளாகிறது. இந்நிலை வந்தடைய காரணம் செல்வத்தை குவித்துக் கொள்வதற்கான மனிதனின் பேராசை ஆகும். கொடூரமான ஆயுதங்களை தவறாக பயன்படுத்தல் மற்றும் வேகமாக விரிவடைந்துவரும் தொழில்மயமாக்கலின் விளைவாக ஓசோன் படலம் அழிந்து வருகிறது. இதன் காரணமாக வெப்பநிலை அதிகரிக்கவும் பனிப்பாறைகள் உருகவும் மற்றும் காலநிலை மாற்றத்திற்குள்ளாகிவிடவும் செய்கிறது. இந்த விஞ்ஞான உண்மையை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்கள். இந்நிலை தொடர்ந்தால், நம்முடைய கிரகத்தின் பேரழிவிற்கு நீண்ட காலம் தேவையில்லை. பூமியில் நமக்கு வாழ ஒரு இடமிருக்காது. வேறு வார்த்தைகளில் கூறுவோமேயானால் நாம் நேரடியாக இறுதித் தீர்ப்பு நாளை நோக்கி செல்கிறோம்.

இது ஒரு வெளிப்படையான உண்மையாக இருந்த போதிலும், இது குறித்து பல சர்வதேச மாநாடுகள் நாள்தோறும் நடக்கிறது. இந்த உலகத்தின் விதியை தங்கள் கைகளில் வைத்திருப்பவர்கள், பிடிவாதமாக இருக்கின்றனர். நமது மற்றும் அவர்களின் ஆன்மாக்களை காப்பாற்றுவதற்கு எந்த ஓர் வழிமுறைகளையும் மேற்கொள்ள அவர்கள் விரும்பவதில்லை. செல்வத்தை பாதுகாத்தல், அதனை விரிவுபடுத்தல் மற்றும் இயற்க்கை வளங்களை எல்லா வகையிலும் கையகப்படுத்துதல் போன்ற யோசனையால் அவர்கள் கண்மூடித்தனமாக உள்ளனர். நாளைய தலைமுறைகளைப்பற்றிய எந்த சிந்தனையும் அவர்களுக்கில்லை. புதைபடிவ ஆற்றலை (Fossil Energy) அதிகமாகப் பயன்படுத்தவும் பொறுப்பற்ற முறையில் போர்கருவிகள் மற்றும் அதிநவீன ஆயுதங்களை பயன்படுத்தவும் செய்கின்றனர். அத்துடன் எவ்விதமான வருத்தமும் இல்லாமல் அவர்கள் மக்களிடத்தில் செல்கிறார்கள். சமீபத்தில் அதாவது 2019 ஏப்ரில் 21-ம் தேதி ஈஸ்ட்டர் தினத்தில் நடந்ததுபோல், அதாவது ஸ்ரீலங்காவிலுள்ள மூன்று கிறிஸ்தவ தேவாலயங்களில் அவர்கள் கொடூரமான

தாக்குதல்களை நடத்தினார்கள். மேலும் 4 ஆடம்பர ஹோட்டல்களிலும் தாக்குதல் நடந்தது. அத்தாக்குதல்களில் அப்பாவிகளான 350-க்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்தனர்.

இந்த தேவாலயங்களில் ஈஸ்டர் தின கொண்டாட்ட நிகழ்சிகளில் மக்கள் கலந்துக் கொண்டிருந்தனர். கொழும்பில் உள்ள புனித அந்தோணியார் தேவாலயம், தலை நகரின் வடக்கே உள்ள ஒரு நகரமான நெகோம்போவிலுள்ள புனித செபாஸ்டியன் தேவாலயம் அதோடு நாட்டின் கிழக்கு பகுதியிலுள்ள மூன்றாவது ஒரு தேவாலயத்திலும் தாக்குதல்கள் நடந்தது. ஏராளமான மக்கள் காயமடைந்தனர். கொழும்பிலுள்ள மருத்துவமனையில் மட்டும் 254 பேர் அனுமதிக்கப்பட்டனர். மேலும் தலைநகருக்கு வெளியே நடந்த இரண்டு தாக்குதல்களில் 60 பேர்கள் காயமடைந்தனர். ஆதாரங்களின் அடிப்படையில் பார்த்தால், கொழும்பில் 64 பேர் உயிரிழந்தனர். மற்றும் 3 ஆடம்பர ஹோட்டல்களும் ஒரு தேவாலயமும் பாதிக்கப்பட்டுள்ளது. இறந்தவர்களில் 35 வெளிநாட்டினரும் உட்படுகின்றனர்.

மிகவும் கோழைத்தனமான செயல் என்று இந்த தாக்குதல்களை கண்டித்த ஸ்ரீலங்கா பிரதமர் ரினில் விக்ரமேசிம்ஹே, இலங்கை மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியதுடன் குற்றவாளிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். இந்த தாக்குதல்களுக்கு யார் காரணம் என்று நமக்கு தெரியாது. தௌஹீத் ஜமா அத்து என்ற குழுதான் இதற்கு காரணமென்றால், இத்தகைய செயல்களை இஸ்லாம் கடுமையாக கண்டிக்கிறது. மேலும் இஸ்லாத்திற்கு மிக தீய பெயரினை அவர்கள் வரவழைத்திருக்கின்றனர். எனது கடந்தகால வெள்ளிக்கிழமை பேருரைகளின் தொடரில் இக்காரியத்தைக்குறித்து நான் உங்களிடம் தெளிவாக கூறியிருந்தது போல இத்தகைய காரியங்கள் இஸ்லாமிய போதனைகள் அல்ல. இத்தகைய நபர்கள் இஸ்லாத்திற்கு கெட்ட பெயரை வரவழைக்கின்றனர். **அத்தாக்குதல்கள் அனைத்தையும் ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாம் திட்டவட்டமாக கண்டிக்கிறது.**

வீடற்றவர்களுக்கும், பசியுள்ளவர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒடுக்கப்பட்டவர்களுக்கும் உதவ இது போன்ற முக்கிய வளங்களை பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதை அவர்கள் உணரவில்லை. ஆனால் இதைக்குறித்து யாருக்கு அக்கறை? உண்மையில் மிகச் சிலருக்கு மட்டும்!

மனிதன் தனது ஆன்மாவை மறந்து விடுகிறான். அதிகாரத்திற்கான பந்தயத்தில் அவன் பிறமக்களின் ஆன்மாக்களையும் மறந்து விடுகிறான். மனிதன், மனிதாபிமானத்துடன் இருக்க வேண்டும். மனித படைப்பின் அடிப்படை என்பது எல்லாம் வல்ல இறைவனை மட்டும் வணங்குவதும், அவனது சர்வவல்லமை மற்றும் தனித்துவத்தை அங்கீகரிப்பதும் வழிபாட்டில் எந்த கூட்டாளிகளையும் அவனுக்கு இணைவைக்காமலிருப்பதும் ஆகும். மேலும் அகில மனிதர்களுடையவும் உள்ளக்கிளர்ச்சியை உணர்ந்து செயல்படும் வகையில் அவனை உருவாக்கப்படுகிறது. ஆனால் மனிதன் அதிகாரத்திற்கான பந்தயத்தில் பணத்தை குவித்துக்கொள்வதற்குான பேராசை காரணமாக பௌதீக படிக்கட்டுகளில் ஏறி சென்று தனது ஆன்மாவை மிக குறைந்த விலைக்கு சாத்தானுக்கு விற்க ஒப்புக்கொள்கிறான்.

மறுவுலக வாழ்கையை விட அவன் இவ்வுலக வாழ்கைக்கு முக்கியத்தும் அளிக்கிறான். லௌகீக சுதந்திரத்திறகான பயணத்தை மேற்கொள்கிறான். தனது சக மனிதர்களை அவன் நசுக்குகின்றான். அவர்கள் தன்னைப் போன்றவர்கள் என்பதையும், அவர்களைப் போன்ற அதே இரத்தம்தான் தனது உடலிலும் ஓடுகிறது என்பதயையும் அவன் மறந்து செயல்படுகிறான். இவ்வாறு ஒவ்வொரு வகையான அநீதிகள், குற்றங்கள், மோசடிகள் மற்றும் ஊழல்களை இவ்வுலகில் நாம் பார்க்கிறோம். பூமி அதன் சுய அழிவுக்கு சாட்சியாக மாறியுள்ளது.

அநீதி மற்றும் ஒழுக்கக்கேடு நிலவும் போதெல்லாம் தெளிவான எச்சரிக்கையை அளித்தபின் இறை நீதி வெளிப்பட்டு காரியங்களை சரியான முறையில் சீரமைத்துக் கொள்கிறது என்பதை மதவரலாறு நமக்கு காட்டுகிறது. இயற்கையின் மீது தனக்கு எந்த கட்டுபாடும் இல்லை என்பதை மனிதன் உணர வேண்டும். அப்பாவிகளான மக்களை தனது விருப்பத்திற்கேற்ப துன்புறுத்துகின்ற செயலை நீண்ட காலம் செய்ய மனிதனை இறைவன் அனுமதிப்பதில்லை. இறைவனிடமிருந்து வரும் இத்தகையை இயற்கை அறிகுறிகள், உண்மையில் மனிதனுக்கு தீங்கிழைப்பதற்கு முன்பு அவன் சரியான நடவடிக்கைகளை மேற்கொண்டு தன்னை சீர்படுத்திக்கொள்ள வழங்கப்படும் எச்சரிக்கை செய்திகளாகும். உண்மையில் பருவநிலை மற்றத்திற்குள்ளாகி புவி வெப்பமடைதல் மற்றும் இயற்கை பேரழிவுகள் ஆகியவை ஒரு எச்சரிக்கை செய்திதான் என்பதில் சந்தேகமில்லை.

எழுந்திருக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. உங்கள் அணுகு முறை மற்றும் மனநிலையை மாற்றத்திற்குள்ளாக்கி உலகளவில் சிந்திக்க வேண்டும். மதம், குறிப்பாக இஸ்லாம் முழுமையான வாழ்க்கை முறையாகும். மனிதனின் சுயநல பேராசைகளை அழித்து, இதயப்பூர்வமான தாராள மனப்பான்மை கொண்டவராக மனிதனை மாற்றுவதில் இஸ்லாம் பெரும் பங்கு வகிக்கிறது. இறைவன் மீது உண்மையான நம்பிக்கையும் மனிதகுலத்தைப் பாதுகாப்பதில் வலுவான உறுதியும் மனிதனில் உருவாக வேண்டும். அதன் மூலம் மட்டும்தான் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கும், சமூக நீதியை நிலைநாட்டுவதற்கும், சமத்தவத்தைக் அழைத்துவருவதற்கும் மற்றும் அக்கறையுடன் சமுதாயத்திற்காக பாடுபடுவதற்கும் முடியும்.

உண்மையான மதத்தின் மீதான நம்பிக்கை மற்றும் நிகரற்ற இறைவன் மீதான சமர்ப்பணத்திற்கும் மட்டுமே கல் இதயகொண்ட நபர்களை எதிர்கால தலைமுறையினரின் மீட்பர்களாக மாற்றுவதில் பெரும் தாக்கத்தை எற்படுத்த முடியும். இதை நமக்குக் காட்டிய சிறந்த முன்மாதிரி இஸ்லாமிய தூதர் அண்ணல் நபிகள் நாயகம் மஹம்மது (ஸல்) அவர்கள் ஆவர்கள். இன்னும் பல சத்தியாத்மாக்கள் இவ்வுலகிற்கு அருட்களை அள்ளி வழங்கியிருந்தார்கள். எல்லாம் வல்ல இறைவனிடம் நம்மை அவர்கள் வழிநடத்தி கொள்ளவும், மனித இனத்தினரிடையே சகோதரத்துவத்தின் உறவுகளை அமைப்பதற்கான வழி முறைகளை வகுத்தளித்திடவும் செய்தனா் மட்டுமல்ல மனிதர்களில் ஒவ்வொருவரும் ஒற்றுமையுடன் இருந்து, ஒருவர் இன்னொருவரின் உணர்ச்சியை உணர்ந்து வாழ்வதற்கான செயல்திட்டங்களை கற்பிக்கவும் செய்தார்கள்.

**எல்லாம் வல்ல இறைவனிடம் தனது செயல்களுக்கு பதிலளிக்க வேண்டும் என்பதை மனிதகுலம் எப்போது பகுத்தறிந்துகொள்கிறார்களோ அப்போது அனைத்து வித அநீதிகளும் அமரத்துவங்களும் குறைந்து விடும். முழு பிரபஞ்கத்தின் மீதும் முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்ட இறைவன், அவன் தேர்ந்தெடுத்த தூதர்களின் காலங்களில் நிகரற்ற அற்புதங்களையும் அடையாளங்களையும் காட்டியதோடு தனது தூதர்களையம் அவர்களைப் பின்பற்றுபவர்களையும் நம்பிக்கையிலும் மனித நேயத்திலும் வழிநடத்தி, அவர்களின் வெற்றிக்கு வழிவகுத்தருளியது போலவே இந்த காலநிலைமாற்றத்தைத் தணிப்பதற்கும் உலகளாவிய எச்சரிகையை**

**குறைபதற்குமான புதுமையான வழி மற்றும் தீர்வுகளை அவன் நமக்கு நிச்சயமாக காட்டிக்கொள்வான்.**

ஆகவே சுற்றுச் சூழலில் நட்பு நிறைந்த ஒரு சூல்நிலையையும் அத்துடன் மிகவும் பொறுப்பான மற்றும் சகிப்புத்தன்மையுள்ள ஒரு சமூகத்தையும் உருவாக்க வேண்டும். அதன்மூலம் இந்த உலகை நமக்கு பாதுகாக்க முடியும். அதற்கு உங்கள் ஒவ்வொருவருடைய பங்களிப்பும் அவசியம். அது உங்களுக்கு தவிற்க முடியாத கடமையாகிவிட்டது. குறிப்பாக இஸ்லாமியர்களுக்கு இந்த முயற்சியில் மகத்தான பங்களிப்பை வழங்க முடியும். இறைவனின் அன்பான தூதர்கள் பல நூற்றாண்டகளாக வெளிப்படுத்திய வழிகாட்டுதல்களை பின்பற்றி ஒரு உண்மையான வாழ்கையை அமைத்து, இயல்பாகவும், நல்லொழுக்கமாகவும், ஆன்மீக மாகவும் உலகிற்கு உண்மையான உணர்வை அவர்களுக்கு வழங்க முடியும். உள் மற்றும் வெளிப்படையாக சீரமையும்போது போது உலகளாவிய நமது நோக்கங்கள் நேர்மையாக மாறிவிடும். பூமியில் நமது இறுதி மூச்சுவரை, எல்லாம் வல்ல இறைவன் நம்மை திரும்ப அழைக்கும் வரை உலக முன்னேற்றத்திற்கு உதவிகள் புரிய நமக்கு மிக சிறந்த முறையில் தயாராக இருப்போம்.

இப்போது எதிர்கொள்ளும் மோசம் மற்றும் இக்கட்டான நிலையினை உணரவும், இந்த உலகத்தின் எதிர்காலத்தையும் உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்களின் வாழ்கையையும் பாதுகாக்க வலுவான நடவடிக்கைகளை எடுக்கவும் அல்லாஹ் மனிதகுலத்திற்கு உதவி புரியட்டும் இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

Translated by
*Azim Ahmad*
*7339689239*

# ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEENSAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNAD KERALA BOARDER)**
**Ph No: 9789180817, 9171977109**